# இறையியல் கோலங்கள்

வடிவம் 14 ஜூன் 2001 வண்ணம் 02



## கிறிஸ்துவின் குருத்துவத்தில் நாம்!

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# Irai Iyal Kolangal

## Tamil Theological Quarterly

**VOL : 14**
**No : 02**
**June 2001**

**வடிவம் : 14**
**வண்ணம் : 02**
**ஜுன் 2001**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,
இலங்கை.

**ஆசிரியர் :**

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

**துணை ஆசிரியர்கள் :**

அருள்திரு. ச. வி. ப. மங்களராஜா
அருள்திரு. ப. ஜோ. ஜெபரெட்ணம்

**நிர்வாகக் குழு :**

சகோ. செ. அன்ரன்
சகோ. தே. ரவிராஜ்
சகோ. அ. பீ. திருமகன்
சகோ. தே. செல்வரட்ணம்
சகோ. ஜே. இளம்பரிதி
சகோ. தா. நிருபன் நிஷானந்

**வெளியீடு :**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.**
**(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)**

**Editor :**

Fr. J. Nicholas

**Sub Editors :**

Fr. S. V. B. Mangalarajah
Fr. P. J. Jebaratnam

**Administrative Board :**

Bro. S. Anton
Bro. T. Ravi Raj
Bro. A. P. Thirumahan
Bro. T. Selvaratnam
Bro. J. Mathy Ilamparithy
Bro. T. Niruban Nishanand

**Publication :**

St. Francis Xavier's Seminary,
Columbuthurai, Jaffna, Sri Lanka.
Tel.No. 021-2482

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியரிடமிருந்து | 1 |
| 2. | கிறிஸ்துவின் முப்பணிகளும் இறைமக்களும் | 2 |
| 3. | குருத்துவமும் இறைவாக்குப் பணியும் | 8 |
| 4. | பணிக்குருத்துவமும் திருவழிபாடும் | 12 |
| 5. | ஈழத் தமிழரின் விடுதலைப் பயணத்தில் குருத்துவத்தின் நிலைப்பாடு | 18 |
| 6. | குருக்களின் பணிவாழ்வில் மரியன்னை – ஆன்மீகம் | 24 |
| 7. | இவ்விதழின் இறையியலாளர் | 28 |
| 8. | Synopsis | 30 |
| 9. | குறுக்கெழுத்துப் போட்டி | 35 |
| 10. | யூபிலி நாயகனுக்கு வாழ்த்து | 38 |

# ஆசிரியரிடமிருந்து...

பணிக்குருத்துவம் பற்றி அண்மைக் காலங்களிலே பல சிந்தனைகள், இறையியல் கருத்துக்கள், விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. ஆனால், அடிப்படையாக பணிக்குருத்துவம் கிறிஸ்துவின் குருத்துவத்தையே மையமாக கொண்டுள்ளது. ஆகவே, கிறிஸ்துவின் பணிகளை நிறைவேற்றுவதிலேயே பணிக்குருத்துவம் மையப்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் முப்பணிகளான அரச, குருத்துவ, ஆசிரியப் பணிகளிலே பங்குகொள்வதே பணிக்குருத்துவத்தின் குறிக்கோளாகும்.

காலத்தின் தேவைகளுக்கேற்ப பல புதிய பணிகளும் பணிக்குருத்துவத்திலே உள்ளடக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. குறிப்பாக, மக்களின் அன்றாட தேவைகள் பிரச்சனைகள் ஆகியவற்றை தொடுகின்ற இறைவாக்குப்பணி, திருவழிபாடு, மேய்ப்புப் பணி இன்று அவசியமாகின்றன. இவற்றுள் வறுமை, உழைப்பின்மை, பெண் அடிமை, மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை பணிக்குருத்துவம் கருத்தில் கொள்வது இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. உண்மைக்காக, நீதிக்காக குரல் கொடுத்த இயேசுவோடு சேர்ந்து பணிக்குருக்கள் துறவியர் நீதி சமாதானத்துக்கான முயற்சிகளிலே முன்னின்று உழைக்க கடமைப்பட்டவர்கள்.

இரண்டாம் வத்திக்கான் சங்க காலத்திலிருந்து திருச்சபையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, பணிக்குருத்துவம் பற்றிய புதிய கண்ணோட்டங்களை உருவாக்கியுள்ளது. நீதி சமாதானத்திற்கான பல போராட்டங்களிலே குருக்கள் துறவியர் முன்னிற்பது ஒரு அரசியல் ஈடுபாடு என விமர்சிக்கப்படுவது இக்காலத்திற்கு பொருந்தாத ஒன்றாகும். பணிக்குருத்துவம் அர்த்தமுள்ளதாக இருக்க பல்வேறு துறைகளில் மக்களின் தேவைகளிலும் குறைகளிலும் ஈடுபாடு கொள்வதும் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்படுகின்றவர்கள் இவர்களின் மேம்பாட்டிற்காக தியாக சிந்தையோடு அர்ப்பணிக்க பலர் இன்று அழைக்கப்படுகின்றார்கள்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பணிக்குருத்துவமே இக்காலத்தின் தேவையாக மாறியுள்ளது. இயேசுவின் அழைப்பும், பணிவாழ்வும் மக்களின் குறைகளைப் போக்கி அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதையே குறிக்கோளாக கொண்டிருந்தது போல, இன்றைய பணிக்குருத்துவமும், மக்களின் தேவைகளுக்கு ஈடுகொடுப்பதாக அமைய வேண்டும். இதன் வழியாகவே பணிக்குருத்துவம் இன்றைய உலகத்திலே அர்த்தம் உள்ளதொன்றாக மாறும்.

அருட்திரு யே. நீக்கிலஸ்

# கிறிஸ்துவின் மும்பணிகளும் இறைமக்களும்

## முன்னுரை

நாம். அனைவரும் அதாவது ஞானஸ்நானம் எனும் அருட்சாதனத்தினால் இறையரசின் அங்கத்தவர்களாக முத்திரை பதிக்கப்பட்டோர், இறைவனின் அன்புப் பிள்ளைகளாக மாறுகின்றோம். எம் ஒவ்வொருவருக்கும் இறைமகன் இயேசுக் கிறிஸ்து விட்டுச் சென்ற மூன்று முக்கிய பணிகளில் பங்கெடுக்க கடமை உள்ளது.

தந்தையாம் ஆண்டவர் மனிதன் பாவம் செய்து தம்மைவிட்டு பிரிந்துசென்ற போது, அவனை அநாதையாக விட்டுவிடவில்லை. மாறாக, பற்பல முறைகளிலும் பல்வேறு வழிகளிலும் நம்முடன் பேசிய இறைவன் இன்று தம் ஒரே மகனினூடாக நம்முடன் பேசியுள்ளார் (எபி. 1:1). தந்தை தனது எண்ணங்களையும் நற்கொள்கைகளையும் தனது மகனினூடாக வெளிப்படுத்தினார். இயேசுக் கிறிஸ்து தந்தையின் முழுவுருவம். இதனால் தான் அவர் கூறினார், 'தந்தையும் நானும் ஒன்றே' (யோவா 10:30) என, இயேசுவின் வருகையினால், நாம் அனைவரும் நீரினாலும் ஆவியினாலும் தூய்மையாக்கப்பட்டு தேர்ந்துகொள்ளப்பட்ட அரச திருக்கூட்டமாக மாறு கின்றோம். கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளான குருத்துவ, இறைவாக்கு, மேய்ப்புப் பணியில் பங்கெடுக்கின்றோம்.

### 1. *குருத்துவப் பணி*

#### 1.1 பணிக்குருத்துவம்

பலி செலுத்த முடியாத குரு இருக்க முடியாது என்ற வசனம் விரிந்துபட்ட பொருளுடையது. கிறிஸ்துவே சிறந்த குரு. அவரின் மீட்பின் செயலே அவரது பலியாகும். இச் செயல் அவர் பிறப்பின் போதே தோன்றி அவரது வாழ்வு முழுவதும் படர்ந்திருந்தது. இறுதியாக கல்வாரியில் உச்சநிலை அடைந்தது. இப்பலி வாழ்வில் அவரது குருத்துவப் பண்பு வெளிப்பட்டது.

இயேசுக் கிறிஸ்துவில் முற்றும் நிறைவேறியது. அவர் இறையியல்பையும், மனித இயல்பையும் பெற்றிருந்தார். அவர் இறைமகனாக இருந்ததால் இறைவனுக்கு உகந்தவரானார். மனுமகன் என்ற அளவில் தமக்குக் கீழ்ப்படிகிறவர் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணமானார் (எபி.5:9). ஆகவே அவர் ஒரு

சிறந்த குருத்துவ இடைநிலையாளர். கிறிஸ்துவே வரப்போகும் நன்மைகளுக்குத் தலைமைக் குருவாக வந்துள்ளார்; தம் சொந்த இரத்தத்தினாலேயே இவ்வாறு நாம் முடிவில்லா மீட்பை கண்டடையச் செய்தார்... இதனால் தான் புதிய உடன் படிக்கையின் இணைப்பாளராக இருக்கிறார் (எபி. 9:11-15) தமது இரத்தத்தினால் நமக்கு பாவப்பரிகாரம் கொண்டுவந்தார். நாம் உயிர் பெறும்பொருட்டு அதை மிகுதியாகப் பெறும்பொருட்டும் (யோவா. 10:10) தானாகவே தன் உயிரை ஒப்படைத்தார் (யோவா. 10:18) நம் பெயரால் தம்மை பலியாக ஒப்புக்கொடுத்தார். இதையே திருச்சபையில் குருக்கள் செய்துவருகின்றனர்.

குரு இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே நிற்கும் இடை நிலையாளர். அவர் இறைவனுக்கு முன் மனிதர்களின் பிரதிநிதியாக நிற்பவர்; அவர்கள் பெயரால் செயலாற்றுபவர். பாவங்களுக்காக பலிகளையும் கொடைகளையும் ஒப்படைப்பதற்காக மனிதர்களின் சார்பாக ஏற்படுத்தப்படுகிறார். மனிதர்கள் பெயரால் இறைவனுக்கு விண்ணப்பங்களையும், மன்றாட்டுக்களையும் ஒப்புக்கொடுக் கின்றார். இறைவனுடைய கொடைகளை மனிதருக்கு கொணர் கின்றார். அவர்கள் பாவங்களை மன்னிக்கிறார். கிறிஸ்துவின் இந்த குருத்துவப் பணியில் பங்குகொண்டு கிறிஸ்துவின் இடத்திலிருந்து பணிபுரிய சில விசேட அழைத்தலைப் பெறுகின்றார்கள். இது பணிக்குருத்துவம் (ministerial priesthood) என்று அழைக் கப்படுகிறது. ஆனால், இவர்கள் மட்டும்தான் கிறிஸ்துவின் குருத்து வப் பணியில் பங்குபெறுகிறார்கள் என்றல்ல. ஏனையவர்களும் அதாவது எல்லாப் பொதுநிலையினரும் பொதுக்குருத்துவம் (common priesthood) வழியாக இக் குருத்துவப் பணியில் பங்கேற்கின்றார்கள். இந்த பொதுக்குருத்துவம் என்றால் என்ன என்று ஆராய்வோம்.

## 1.2 பொதுக்குருத்துவம் (common Priesthood)

பொதுக்குருத்துவம் என்றால் என்ன என்பதை 2ம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு கூறுகிறது. "கிறிஸ்தவர்கள் தம் எல்லாச் செயல்களாலும் ஞானப் பலிப்பொருட்களை ஒப்புக் கொடுப்பதற்கும் இருளில் நின்று அவர்களைத் தம் வியத்தகு

ஒளிக்கு அழைத்தவரின் ஆற்றலை பறைசாற்றுவதற்குமே அவர்கள் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்'' (திருச்சபை எண் 10).

புனித இராயப்பர் இவர்களுடைய குருத்துவப் பணி யாது என விவரிக்கின்றார். "நீங்களும் உயிருள்ள கற்களென ஞான இல்லமாக அமைக்கப்படுவீர்களாக, அதில் கிறிஸ்துவின் வழியாக இறைவனுக்குகந்த பலி நிறைவேற்றும் குருத்துவ திருக்கூட்டமாக அமைவீர்களாக'' (1இரா 2:5) "நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட இனம், அரச குருத்துவ திருக்கூட்டம் பரிசுத்த குலம் இறைவனுக்கு சொந்தமான மக்கள். இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு உங்களை அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி'' (1இரா 2:9)

திருமுழுக்கின் மூலம் நாம் கிறிஸ்துவுடன் மூலக்கருவறையில் நுழைந்து அவருக்கு புகழ்ச்சி பண் இசைக்க தகுதியடைகிறோம். நாம் கிறிஸ்துவின் ஊடாக இறைவனுக்கு புகழ்ச்சி பலியை ஒப்புக்கொடுக்கின்றோம். இறைவனின் அன்பிற்கும் வல்லப செயல்களுக்கும் சான்று பகர்வதும் இவர்களின் குருத்துவ அலுவல். இறைவனால் அழைக்கப்பட்டு கிறிஸ்துவில் திருநிருநிலைப்படுத்தப் பட்டுள்ளார்கள். இறைமக்கள் மீட்படைந்து பெரிய குரு கிறிஸ்து வால் இறைவனுக்கு பொதுப் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் புனித மக்கள், இறைவனின் ஆலயம், கிறிஸ்து வின் மறைஉடலின் உறுப்புக்கள். புனிதமாக வாழ்வது இவர்கள் கடமையாகும்.

நாம் தினமும் மரிக்கவேண்டும்; அதாவது நம்மை ஒறுத்து பரித்தியாகம் செய்யவேண்டும். புனித சின்னப்பர் கூறுவார்; "உங்கள் உடலை கடவுளுக்கு உகந்த பலியாகவும் உயிருள்ள பலியாகவும் ஒப்புக்கொடுங்கள். இதுவே நீங்கள் செலுத்தவேண்டிய ஆன்மீக வழிபாடு'' (உரோ.12:1).

உலகில் பலவகையான வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இறைமக்கள் தாங்கள் குருக்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. கிறிஸ்து தம் தந்தைக்கு பணிபுரிந்து தம்மைத் தாழ்த்தி சிலுவை மரணம் மட்டும் கீழ்படிந்து நம்மை மீட்டார். அதுபோலேவே இறைமக்கள் உலக வேலைகளில் ஈடுபட்டு வாழும்போது சட்ட திட்டங்களுக்கு அமைந்து பொறுப்போடு வாழும்போது இறை

வனுக்குக் கீழ்ப்படிகின்றார்கள். அவரது திருச்சித்தத்தை நிறை வேற்றுகின்றார்கள். ஆனால் தங்கள் குருத்துவப் பணிகளையும் செய்கின்றார்கள். திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாக இல்லாமல் அவரின் மணமகளாக நின்று செயலாற்றுகிறாள். இதில் பங்குபெறும் எல்லா மக்களும் குருக்கள். குருவோடு தங்கள் மனங்களையும் ஒன்றித்து பலியில் பங்குபெறும் தங்களையும் சேர்த்து பலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். இரசத்தோடு சேர்க்கப்படும் துளிநீர் தன் இயல்பை இழந்து இரசமாக மாறுவதுபோல் கிறிஸ்துவாகிய பலிப் பொருளோடு தங்களையும் சேர்த்து ஒப்புக்கொடுக்கும்போது அது தெய்வீக பலிப்பொருளின் மதிப்பை இறைவன்முன் அடைகிறது.

மக்களிடமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பெரிய குரு இயேசுக் கிறிஸ்து. இவர் இப்புது மக்களை தம்முடைய பிதாவாகிய இறைவனுக்கு முன்பாக இராஜாக்களும் குருக்களுமாக்கினார். இப் புதிய மக்கள் கிறிஸ்துவின் குருத்துவத்தில் மட்டுமன்றி அவரின் அரச தன்மையிலும் பங்குகொள்கின்றனர்.

## 2. இறைவாக்குப் பணி

புதிய ஏற்பாட்டின் சிறந்த ஓர் இறைவாக்கினர் நமதாண்டவர் இயேசுக் கிறிஸ்து ஆவார். இயேசு தம் வாழ்வில் காலங்களின் அடையாளத்தை தெரியப்படுத்தினார். புதிய வழிபாட்டை அறிவித்தார். இறைவாக்கினர் போலவே பரிசேயர்களின் தீய நடவடிக்கைகளைக் கண்டித்தார். "சட்டத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிக்க வந்தேன் என நினைக்காதீர்கள். அழிப்பதற்கன்று நிறைவேற்றவே வந்தேன்" (மத். 5:17). இயேசு அதிகாரத்துடன் பேசினார். தமது தந்தையின் சித்தத்தை மக்களுக்கு வெளிப்படுத்தவும் மீட்புபெற மக்கள் என்ன செய்ய வேண்டும் என போதிக்கவும் இவ்வுலகில் தோன்றினார்.

நமதாண்டவர் இவ்வுலகைவிட்டு சென்றபோது நற்செய்தியின் போதகப் பணியை இறைமக்களிடம் விட்டுச்சென்றார். இதோ இறுதி நாளில் எல்லார் மேலும் என் ஆவியைப் பொழிவேன். உங்கள் புதல்வர், புதல்வியர் இறைவாக்குரைப்பர்.... (திருப்பணி 2:17-18). பரவசப் பேச்சைவிட இறைவாக்குப் பணியே சிறந்தது (1கொரி.14:1-5). திருமுழுக்கினால் கிறிஸ்தவர்கள் பெற்ற அபிஷேகத்தினால் கிறிஸ்துவினு டைய இறைவாக்குரைக்கும் 'அலுவலில்' பங்கு பெறுகின்றார்கள். ஆகவே இதை ஒவ்வொரு இறைமகனும் தன் வாழ்வில் செயல்

முறையில் காட்டவேண்டும். ஏனெனில், இன்னும் விசுவாசியாகாத வர்களை தன்பால் அழைத்துவர நாடுகளின் மத்தியில் அமைக்கப்பட்ட ஓர் அடையாளம் திருச்சபை.

"தாங்கள் கேள்வியுறாத ஒருவரை எவ்வாறு விசுவசிப்பர்? அறிவிப்பவன் இல்லை எனில் எவ்வாறு கேள்வியுறுவர்" (உரோ. 10:14). இறைவனுடைய அன்பையும், அவர் தம் திருமகனை உலகின் மீட்புக்காக அனுப்பியதையும் எங்கும் பறைசாற்றுவதும், அந்த இறை மகன் இயேசு பாடுகள் பட்டு மரித்து, உயிர்த்ததையும் போதிக்க வேண்டும். உண்மையான அப்போஸ்த்தலன் தனது வார்த்தையால் விசுவசியாதவர்களை விசுவாசத்திற்கு இட்டுச்சென்று, உறுதிப்படுத்தி, அதை நிறைவாழ்வில் ஊக்குவித்து கிறிஸ்துவை பறைசாற்றும் வாய்ப் பினை தேடுகின்றான். ஏனெனில், கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருங்கி ஏவுகிறது (2கொரி. 5:14). மேலும் நற்செய்தியை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு (1 கொரி. 9:16) எனும் வார்த்தைகள் எல்லா இறைமகனின் இதயத்திலும் எதிரொலிக்க வேண்டும்.

கிறிஸ்து தமது போதிக்கும் பணியை திருச்சபைக்கு ஒப்படைத்தார். இதனால் திருச்சபையின் தலைவருக்கு மட்டுமே போதிக்கும் பணி உரித்தானது என்பதல்ல, மாறாக பொதுநிலையினரின் ஊடாகவும் இவ் அலுவலை ஆற்றி வருகின்றார். இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு உங்களை அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி (1 இரா. 2:9).

### 3. மேய்ப்புப் பணி

இயேசுக் கிறிஸ்துவே இஸ்ராயேல் மக்களால் எதிர்பார்க்கப்பட்ட, இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்ட மெசியா, அரசர் ஆவார். "அவருடைய தந்தையான தாவீதின் அரியணையை ஆண்டவராகிய கடவுள் அவருக்கு அளிப்பார். அவர் யாக்கோபின் குலத்தின் மீது என்றென்றும் அரசாள்வார். அவருடைய ஆட்சிக்கு முடிவே இராது (லூக். 1:32). ராபி நீர் கடவுளின் மகன், நீரே இஸ்ராயேலின் அரசன் (அரு. 1:49). கிறிஸ்துவின் அரசு இவ்வுலக அரசை போன்றது அல்ல; இவ்வுலக அரசுடன் போட்டியிடும் அரசல்ல, மாறாக அவர் இவ்வுலக அரசை மதித்து நடந்தார். மேலும் அவரது ஆட்சி அதிகாரத்திலும், ஆடம்பரத்திலும் வெளிப்படுவதல்ல. மாறாக, அன்பிலும், அமைதியிலும்

எளிமையிலும் வெளிப்படுவது. இவ் அரசு உண்மையான அரசு; வாழ்வின் அரசு; புனிதத்தின் அரசு; அருளின் அரசு. கிறிஸ்துவின் அரசு மகிமையின் அரசாகும். இறுதிநாளில் எல்லா அரசர்களையும் வென்று தமது அரசை தந்தையிடம் கையளிப்பார்.

அபிசேகம் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் அரசனாகின்றான். கிறிஸ்துவின் அரசில் பங்குகொள்கின்றான். கிறிஸ்தவர்களின் அரசு ஓர் ஆன்மீக அரசு. புகழிலும், செல்வத்திலும் அடங்கியது அல்ல. இறைமக்கள் தங்கள் ஆன்ம அரசை யாதொரு அதிகாரமல்லாமல், அன்பிலும் ஊழியத்திலும் காட்டவேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் அவ் அதிகாரத்தை ஓர் தொண்டாக, ஊழியமாக பயன்படுத்தலாம். "என் தந்தை எனது அரசு பதவியை வழங்கியது போல், நானும் உங்களுக்கு அதை வழங்கப் போகின்றேன்" (லூக். 22:29) பசாசை உதறித் தள்ளிவிட்டு அதன் ஆதிக்கத்தை விட்டு வெளியேறி இறைமகன் இயேசுவை பற்றிக்கொள்ளும் ஒவ்வொருவனும் கிறிஸ்துவின் அரசு மகிமையில் பங்குபெறுகின்றான். அவர்களை எம் கடவுளுக்கு அரச குருக்களாக்கினீர். அவர்கள் மண் மீது அரசாள்வார் (திருவெளிப்பாடு 5:10). இயேசு தம் சீடர்களின் கால்களை கழுவி நமக்கு மாதிரிகை காட்டினார். இறைமக்களும் அதை பின்பற்றி இறையரசை பின்பற்ற வேண்டும்.

## முடிவுரை

இவ் மூன்று பணிகளும் வெவ்வேறு தனிப் பணிகள் அல்ல, அவை தங்களுக்குள்ளேயே நெருங்கிய தொடர்புடையவை. ஆகவே இவ் மூன்று பணிகளும் அதே வாழ்வை மூன்று கோணங்களில் பிரதிபலிப்பவை எனலாம். சிருஷ்டிகரும் தந்தையுமான இறைவனோடு தொடர்புகொண்டு இவ் வாழ்வு அமையும்போது குருத்துவப் பணியாகும். உலகில் மனிதர்கள் முன் கிறிஸ்துவுக்கும் அவரது அரசுக்கும் சான்று பகரும் வகையில் இது அமையும்போது இறைவாக்குரைக்கும் பணியாக மாறுகின்றது. தங்கள் வாழ்வின் படைப்பனைத்தையும் இறைவனுக்கு பணியவைக்கும் போது அரசர்களாக விளங்குகின்றனர். ஆகவே, தங்கள் அனுதின வாழ்வில் இறைமக்கள் இம் மூன்று பணிகளையும் தனித்தோ, ஒரே சமயத்தில் ஒன்றித்தோ செய்ய முடியும்.

அருட்சகோ. P. மகேஷன் அ.ம.தி.

# குருத்துவமும் இறைவாக்குப் பணியும்



குருத்துவத்தின் அடிப்படைகளை அணுகிச் சென்றால், அது திருத்தூதர்களின் அழைத்தலையும் பணி வாழ்வையும் அடித்தளமாகக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை (லூக். 2:10) அவனியெங்கும் அறிவிக்க ஆண்டவர் இயேசு பலரை அழைத்தார். அவர்களுள் சிலரை திருத் தூதர்களாகப் பெயர் சொல்லி அனுப்பினார். "இறையாட்சி பற்றிப் பறை சாற்றவும், உடல் நலம் குன்றியோரின் பிணி தீர்க்கவும்." (லூக். 9:2; மத்.10:1) அதிகாரமும் வல்லமையும் வழங்கினார்.

திருத்தூதர்களும் இறையாட்சி பற்றிய இறைவாக்குப் பணியைத் தம் தலையாய கடமையாகவும் பொறுப்பாகவும் கொண்டனர். திருத்தூதர் பணி நூல் இவ்வுண்மையைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

"அவர்கள் நாள்தோறும் கோவிலிலும் வீடுகளிலும் தொடர்ந்து கற்பித்து, இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்து வந்தார்கள்." (தி.ப. 5:42) "ஆண்டவரும் தாம் மீட்டுக்கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக்கொண்டே இருந்தார்" (தி.தூ. 2:47).

நம்பிக்கை கொண்டோரின் கூட்டம் பெருகியது; அனைவரது பொருட்களும் உடைமைகளும் பொதுவாகின. அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப அனைத்தும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவ் வேளைகளில் வழக்கமாக எழக்கூடிய பராமரிப்புச் சிக்கல் அங்கேயும் ஏற்பட்டது. "கிரேக்க மொழி பேசும் கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் முறையாகக் கவனிக்கப்படவில்லை என முறைப்பாடு எழுந்தது" (தி.தூ. 6:1) இதற்குத் தீர்வுகாண முயன்ற பன்னிரு திருத்தூதரும்,

“சீடர்களை ஒருங்கே வரவழைத்து, நாங்கள் கடவுளது வார்த்தையைக் கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவது முறை அல்ல” (தி.ப. 6:2).

எனக் கூறிப் பராமரிப்புப் பணிக்காகத் திருத்தொண்டர்களை தெரிந்தெடுத்தனர். திருத்தூதர் பணி நூலின் பக்கங்களிலெல்லாம் பரிசுத்த ஆவியானவரே திருத்தூதர்களை இறைவாக்குப் பணிக்கென்று அனுப்புவதை ஆங்காங்கே படிக்க முடியும் (13:2,4). புனித பவுல் “கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதே என் குருத்துவப் பணி” உரோ. 15:16 எனத் தமது பணியின் முதன்மையைக் கோடிட்டுக் காட்டுகிறார். “நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!” 1கொரி 9:16 என நற்செய்தி அறிவிப்புப் பணியின் அவசியத்தை அறிவிக்கிறார். புனித பவுல் தமது சீடர் திமோத்தேயுவுக்கு எழுதிய மடலில், “இறைவார்த்தையை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் கருத்தாயிரு. கண்டித்துப் பேசு; கடிந்துகொள்; அறிவுரைகூறு; மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு” 2திமோ. 4:2 என இறைவாக்குப் பணியை ஆற்றவேண்டிய வழிமுறைகளை எடுத்தோதுகிறார்.

திருத்தூதர் வழி உருவான திருச்சபையும் ஆண்டவர் இயேசுவின், “உலகெங்கும் சென்று .படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்” (மத். 16:15) என்ற பணிப்புரையைத் தன் தலையாய பணியாகக் கொண்டும், திருத்தூதர்களின் படிப்பினைகள் வழிமுறைகள் என்பவற்றை பின்பற்றியும் இறைவாக்குப் பணியை ஆற்றுகின்றது. திருச்சபையின் திருத்தந்தையர்களும் அவரோடு இணைந்த ஆயர்களும் எப்பொழுதும் இவ்வலுவலைக் கருத்தாகச் செய்கின்றனர். (2ம் வத்திக்கான் சங்க ஏடு) ஆயரின் உடன் உழைப்பாளர்களான குருக்களும் இறைவாக்கைப் போதிக்கும் பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர். “இறைமக்கள் முதன் முதலில் உயிருள்ள இறைவனின் வாக்கினாலேயே ஒன்றுசேர்க்கப்படுகின்றார்கள். இவ்வாக்கை குருக்களிடமிருந்து மக்கள் எதிர்பார்ப்பது முற்றிலும் சரியே........ ஆயரின் உடனுழைப்பாளர்கள் என்ற முறையில் குருக்கள் இறைவனின் நற்செய்தியை எல்லோருக்கும் போதிப்பதைத் தங்கள் கடமையாகக் கொண்டுள்ளார்கள் (ச.ஏ.கு.ப. 2:4) என 2ம் வத்திக்கான் சங்கம் விதந்துரைக்கின்றது. மேலும், ஆண்டவரில் தங்கள் மகிழ்ச்சிக்குக் காரணமான நற்செய்தி உண்மையை எல்லோருடனும் பகிர்ந்துகொள்ளக்

குருக்கள் கடன்பட்டிருக்கிறார்கள்.'' (ச.ஏ.கு.ப.2:4). இவ்வாறு தாம் பெற்ற பெருவாழ்வைப் பிறரோடு, இறைமக்களோடு பகிர்ந்துகொள்ளக் குருக் களுக்கு அழைப்பு விடுக்கிறது திருச்சங்கம்.

அறிவியலும் தொழில்நுட்பமும் அசுரவேகத்தில் வளர்ந்துவரும் காலம் இது. கடந்தகாலத்தில் கற்பனையில் தானும் நினைக்க முடியாதவை நிகழ்கால நிகழ்வுகளாக இன்று காட்சி அளிக்கின்றன. இக்காலகட்டத்தில் குருக்களின் பணியும் வாழ்வும் புதிய புதிய பணிகளையும் பணித் தளங்களையும் எதிர்நோக்கி இருக்கின்றன. அவற்றில் பல சங்கடங் களையும் சவால்களையும் சந்திக்கவேண்டியுள்ளது. நற்செய்தியாகவே இந்த உலகில் மனுவுரு ஏற்ற இயேசு முக்காலத்தையும் முற்றும் உணர்ந்தவராகவே சென்றவிடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தார். உலகுள்ளளவும் இப் பணி தொடரவும் பணித்து நின்றார் (மத். 28:18–20). ஏனெனில், “அகர மும் னகரமும் நானே'' என்கிறார் கடவுளாகிய ஆண்டவர். இருந்தவரும் இருக்கின்றவரும் வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவரும் அவரே'' (தி.வெ. 1:8).

காலங்கள் மாறலாம்; கருத்துக்கள் மாறலாம். ஆனால், கடவுள் என்றும் மாறாதவர். ஆகவே இறைவாக்குப் பணியும் நீடித்து நிலைக்கும். எனவே இப் பணிக்கெனச் சிறப்பாக அழைக்கப்பட்ட குருக்கள் இக்காலத்தின் குறிகளை கருத்தாய் ஆராய்ந்து, கடவுளின் அருளோடு ஒன்றிணைந்து இப் பணியை ஆற்றவேண்டும். இப் பணியின் வெற்றி, இறைவனோடு கொள்ளுகின்ற உறவிலேயே தங்கியுள்ளது. இறைவனோடு கொள்கின்ற நெருங்கிய தொடர்பின் வெளிப்பாடாகவே இறைவாக்குப் பணி அமையவேண்டும். அப்பொழுதுதான் அது இறைஅனுபவமாக –பொருள் உள்ளதாக அமையமுடியும். “இறைவாக்கைப் பொதுவாகவும் கொள்கை யளவிலும் மட்டும் விளக்கினால் போதாது. மாறாக, என்றும் நிலைக்கும் நற்செய்தி உண்மைகளை நடைமுறை வாழ்க்கைச் சூழ்நிலைகளோடு இணைத்து விளக்கவேண்டும்.'' (கு.ப. 2:4) எனச் சங்கம் இன்றைய குருக் களுக்கு அறிவுரையும் ஆலோசனையும் வழங்குகின்றது. இன்று இறை வாக்கைக் கேட்பவர்கள் பலர் உள்ளனர். ஆனால், அதனை வாழ்வாக்கி வாழ்க்கை அனுபவமாக்கி வாழ்பவர்கள் – “அதன்படி செயல்படுகிறவர்கள்'' (லூக். 8:21) மிகக் குறைந்த எண்ணிக்கையினரே. “வார்த்தையைக் கேட்டும், கவலை, செல்வம், வாழ்வில் வரும் இன்பங்களால் நெருக்கப்பட்டு'' (லூக். 8:14) இறைவார்த்தை செயல்படமுடியாத முட்செடி போன்ற உள்ளத்தினராக

இருக்கின்றனர். இத்தகையோர் மீளவும் பண்படுத்த வேண்டியவர்கள். மீளவும் போதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதைக் குருக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆலயத்தின் அகலம், கோபுரத்தின் உயரம், ஆலய விழாவின் ஆடம்பரம் இவற்றில் மட்டும் பெருமிதம் கொள்ளும் கிறிஸ்தவர்கள் இன்னும் நடைபயிலும் குழந்தைக்கே ஒப்பானவர்கள். இவர்கள் விசுவாசத்தின் விளிம்பிலே தான் வாழ்கிறார்கள். விசுவாசத்தின் உள் ஆழங்களுக்குச் செல்லும் வழிகளைக் குருக்கள் இறைவாக்கில் தாங்களும் கண்டுகொண்டு விசுவாசிகளுக்கும் போதிக்க வேண்டும்.


“காலம் வருகிறது; ஏன் வந்தேவிட்டது! அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்பிற்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர். கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்பிற்கேற்ப உள்ளத்தில் தான் வழிபட வேண்டும்.” (யோவா 4:24)

இந்த நிலைக்குரிய காலம் கனியவேண்டும். இறைவனின் வாக்கு இத்திசை நோக்கி நம்மை இட்டுச்செல்ல வேண்டும். இப் பணி திருச்சபைமேல் சுமத்தப்பட்டுள்ளது. ஆயர்களும் அவரது உடனுழைப் பாளர்களான குருக்களும் இப் பணியைச் சிறப்பாக ஏற்றுள்ளார்கள். எனவே அனைவரும் இறைவாக்கில் ஊன்றியவர்களாக – ஊறியவர்களாக – உறவு கொண்டவர்களாகச் செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

திரு. ம. இயேசுதாசன்
இளைப்பாறிய ஆசிரியர்

இறைவார்த்தை எவ்வளவுக்கெவ்வளவு உடைத்து கொடுக் கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது அர்ப்பணம், தியாகம் ஆகிய கிறிஸ்தவ குண இயல்புகளை மனதில் பதியவைக்கும். திருவுரை யானது விசுவாசிகள் தம் வாழ்க்கையை மாற்றிய மைக்க துணைசெய்வதுடன், இறைபணியும் வாழ்க் கையும் பிரிக்க முடியாது என்பதையும் உணர்த்த வேண்டும். **(தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு 1995)**

# பணிக்குருத்துவமும் திருவழிபாடும்



"ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் என்ன கைம்மாறு செய்வேன்? மீட்பின் கிண் ணத்தைக் கையில் எடுத்து ஆண்ட வரது பெயரைத் தொழுவேன். இதோ! ஆண்ட வருடைய மக்கள் அனைவரின் முன்னிலையில் அவருக்கு என் பொருத் தனைகளை நிறைவேற்றுவேன்" (தி.பா. 116:12–14)

## முன்னுரை

ஒவ்வொரு பணிக்குருவின் வாழ்வும் பணியும் அவர் நாள் தோறும் இறைமக்களோடு சேர்த்து தலைமை தாங்கி இறைபுகழ் கூறி ஒப்புக்கொடுக்கும் திருவழிபாட்டிலேயே அர்த்தம் பெறுகின்றது. அவ ரது கைகளினால் இரத்தம் சிந்தாவகையில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும், இறையருளை வாரிவழங்கும் திருவருட்சாதனச் சடங்குகளிலும், அவர் நாள்தோறும் தனக்காகவும் இறை மக்களுக் காகவும் செபித்துவரும் திருப்புகழ் மாலையிலுமே அவர் வாழ்வும் பணியும் ஊற்றெடுக்கின்றன.

## வெண்ணிறமும் செந்நிறமும்

ஓர் குருவினதும் அவர் பணிசெய்யும் இறைமக்களினதும் வாழ்வே, ஒவ்வொருநாளும் அவர் ஒப்புக்கொடுக்கும் திருப்பலி ஆகும். திருப்பலியில் வெண்ணிற கோதுமை அப்பம் யேசுவின் திரு உடலாக அவரது கையில் மாறுகின்றது. இவ்விதமாக திரு உடலாக மாறும் அப்பமானது தொடர்ந்து வெண்ணிறமாகவே இருப்பது போல ஒரு குருவின் வாழ்வும் தூய்மையானதாக மிளிரவேண்டும். ஒரு

பணிக்குருவின் வாழ்வு பல்வேறு சவால்கள் நிறைந்ததாகும். இச் சவால்கள் மத்தியில் தனது வாழ்வின் புனிதத்தையும் இறைமக்களின் வாழ்வின் புனிதத்தையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை ஒரு பணிக்குரு கொண்டிருக்கின்றார்.

மேலும், திருப்பலியில் செந்நிற இரசமானது இயேசுவின் திரு இரத்தமாக அவரது கையில் மாறுகின்றது. இவ்விதமாக திரு இரத்தமாக மாறும் இரசமானது தொடர்ந்து செந்நிறமாகவே இருப்பது போல ஒரு குருவின் வாழ்வும் தியாகம் நிறைந்த பலி வாழ்வாகத் திகழவேண்டும்.

## ஆயர் - குரு - திருத்தொண்டர் - இறைமக்கள்

பணிக்குருத்துவத்தின் முதல் நிலை ஆயர். இரண்டாம் நிலை குரு. மூன்றாம் நிலை திருத்தொண்டர். இறைமக்கள் மத்தியில் இருந்து இவர்கள் "ஆரோனைப் போல கடவுளிடமிருந்து" அழைப்புப் பெறுகின்றனர். ஓர் மறைமாவட்டத் தலத் திருச்சபையின் பணித் தலைவராக ஆயர் திகழ்கின்றார். அவரது "உடன் உழைப்பா ளர்களாக" குருக்கள் இரண்டாம் நிலையில் பங்குத்தலத் திருச் சபையின் பணித்தலைவர்களாக திகழ்கின்றனர். இறைவார்த்தை மற்றும் நற்கருணைப் பணியாளர்களாக மூன்றாம் நிலையில் திருத் தொண்டர் நியமனம் பெறுகின்றனர். எனவே ஓர் ஆயருக்கும் அவரின் குருக்களுக்கும், திருத்தொண்டர்களுக்கும் இடையில் நிலவ வேண் டிய உறவு, விண்ணரசுப் பணியில் உடன் உழைப்பாளிகள் என்னும் உன்னத உறவாகும். ஏனெனில், இயேசுவின் ஒரே குருத்துவத்தில் சமமாக, மூன்று வெவ்வேறு படிநிலைகளில் "அவர் இறைமகனா யிருந்தும், துன்பங்கள் வழியாக கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்", (எபி. 5:8) என்னும் இறைவார்த்தைக்கேற்ப கீழ்ப்படிதலின் மூலம் பங்கேற்கின்றனர். ஆயன் தன் மந்தையின் மேல் கரிசனையுள்ள வராயிருப்பது போலவும் மந்தைகள் ஆயனின் குரலுக்கு செவி மடுப்பது போலவும் ஆயர் – குரு – திருத்தொண்டர் – இறை மக்கள் உறவு அமைய வேண்டும்.

## "இதை என் நினைவாகச் செய்யுங்கள்"

"உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்", "உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்", என்று கூறி நற்கருணை மூலம் எங்களோடு வாழ விரும்பிய இயேசு இறுதி இராவுணவு வேளையில் நற்கருணையை ஏற்படுத்தியபோது, "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற வார்த்தைகளையும் கூறி குருத்துவத்தை ஏற்படுத்தினார். அப்போஸ்தலர்களை முதற் குருக்களாக ஏற்படுத்தினார். உலக முடிவுவரையும் நற்கருணைப் பலி தொடர் பலியாக நிறைவேற வேண்டும் என இயேசு விரும்பியதன் விளைவே குருத்துவம் என்னும் அருட்சாதனம் ஆகும். எனவேதான் ஓர் பணிக்குரு நற்கருணையுடன், நற்கருணைப் பலியுடன், இறைமகன் இயேசுவுடன், இறைமக்களின் மீட்புச் செயலுடன் இன்றியமையாத வகையில் மிகவும் நெருங்கிய உறவுடன் இணைக்கப்பட்டுள்ளார்.

## மரியன்னை ஒரு குருவின் அன்னை

ஒரு பணிக்குரு இறைமகன் பதிலாள் அவர் இயேசுவின் பிரசன்னத்தை அருட்சாதனமுறையில் நிகழ்விப்பதற்கு அபிஷேகம் வழியாக அதிகாரம் பெற்றவராக இருக்கின்றார். ஆலயப் பீடத்தில் மட்டும் அல்ல, வாழ்வு என்னும் பீடத்திலும் அருளடையாளங்கள் மூலம் இயேசுவின் மீட்புச்செயலை நிகழ்த்தவேண்டிய மறு கிறிஸ்து வாகத் திகழ்கின்றார். பாவத்தை இறைமகனிடமாக இருந்து மன்னிக்கும் அதிகாரத்துடன், நல்லயானுக்குரிய இழந்துபோனதை தேடி மீட்கும் இரக்க சிந்தையுடன், செயலாற்ற வேண்டியவராக இருக்கிறார். எனவே விசேடமான முறையில் மறுகிறிஸ்துவாகத் திகழ்கின்ற ஒரு பணிக் குருவிற்கு உன்னத தாயாக விளங்குபவள் எம் அன்னை மரியாள். அன்று இயேசு சிலுவையில் தன்னைத் தானே தன்னிலே அதாவது பலிப்பொருளாக, குருவாக, பலிப்பீடமாக இருந்து ஒப்புக் கொடுத்த அந்த உன்னத செயலுக்கு தன் வேதனைகளுடாக ஒத்து ழைத்தவள் அன்னை மரியாள். எனவேதான், சிலுவையடியில் இயேசு,

தான் அன்புசெய்த அப்போஸ்தலர் மூலம் இராவுணவு வேளையில் தனது மார்பில் சாய்ந்து வேதனைமிகுந்த இதயத்துடிப்பின் ஒலிகளை கேட்டனுபவித்த யோவான் மூலம் தனது அன்புக் குருக்கள் எல்லோரையுமே மரியன்னையிடம் ஒப்படைத்தார். ஆகவே மரியன்னை தன்வயிற்றில் தாங்கிப் பெற்ற தன் அன்பு மகனை அளவற்றவிதமாக அன்புசெய்ததுபோல சிலுவையடியில் தேவனையுடன் பெற்றெடுத்த குருக்களையும் அளவற்றவிதமாக இறுதிவரையும் உலக மீட்பிற்காக அன்புடன் பராமரித்து வளர்த்து வருகின்றாள். எனவே தேவதாய் குருக்களின் தாய்.

## பணிக்குருத்துவம் கத்தோலிக்கத்தின் ஆணிவேர்

— வரலாற்றுச் சான்று

குருக்கள் இல்லை என்றால், நற்கருணைப் பலி இல்லை. அருட்சாதனங்கள் இல்லை. கத்தோலிக்க மதத்தின் அழிவு குருக்களின் அழிப்பிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து ஒல்லாந்தரின் ஆட்சியானது இலங்கையில் 30வருட குருக்களற்ற வரட்சிநிலையை உருவாக்கியதையும், யாழ்ப்பாணத்தில் பறங்கித்தெரு என அழைக்கப்பட்ட 4ம் குறுக்குத்தெருவும், கடற்கரை வீதியும் சந்திக்கும் இடத்தில் இருந்த வீட்டில் யோசவ்வாஸ் முனிவர் முதற்திருப்பலியை நிறைவேற்றி அருட்சாதனங்களை நிறைவேற்றிய நாளில் இருந்து (*Antoninus A.J.B. OMI The Chroniclo of the Sanctuary of our Lady of Madhu, p.39*). மீண்டும் கத்தோலிக்கம் துளிர்விட்டு வளர்ந்ததையும் நாம் அறியலாம்.

எமது யாழ் மறைமாவட்டம் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர் வதற்கு பல குருக்களும் ஆயர்களும் தம்மைத் தியாகம் செய்துள் ளனர். முதல் மறைபரப்பாளர்களாகப் பணியாற்றிய போர்த்துக்கேயர் காலத் துறவிகளாகிய பிரான்சிஸ்கு சபை, இயேசு சபைக் குருக்கள் தொடங்கி அண்மைக் காலத்தில் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிச்சென்று இறந்த ஒம்லோ அடிகள் கொன்சால்வஸ் அடிகள் வரையான அமலமரித் தியாகிகள் சபை மிசனறிகள் தமது உயிரைத் துச்சமென மதித்து துணிவுடன் பணியாற்றாதுவிட்டிருந்தால் இன்று

கத்தோலிக்கம் இம் மண்ணில் இல்லாமல் வேரற்றுப் போயிருக்கும். எனவே கத்தோலிக்கம் நின்று நிலைப்பதற்கு பணிக்குருத்துவம் இன்றியமையாததாகும்.

## எனது சித்தம் அல்ல உமது சித்தம் நிறைவேறுக

இயேசு தந்தையோடு செபிப்பதற்கு தனிமையான இடங்களை நாடிச் சென்றார். தனக்கு வரப்போகும் பாடுகளை நினைத்தவராக இறைசித்தத்தை அறிய ஆவல்கொண்டு தான் அன்பு செய்த சீடர்களோடு ஜெத்சமேனி தோட்டத்திலே செபம் செய்யச் சென்றார். சீடர்களால் கூட ஒருமணி நேரம் அவரோடு விழித்திருக்க முடியாத நிலையில், தந்தையுடன் இயேசு அன்புறவில் தனித்திருந்தார். தந்தையுடனான இயேசுவின் அன்புறவு சீடர்கள் அவர்மேல் வைத்திருந்த அன்புறவைவிட ஆழமானது. மனித பலவீனத்தின் காரணமாக இந்தத் துன்பம் தன்னைவிட்டு நீங்குமாறு செபித்தார். ஆயினும், இறைசித்தம் எதுவோ அப்படியே ஆகட்டும் என்று செபித்தார். ஒரு குருவின் பணிக்களத்திலும் தந்தையோடு மட்டும் தனித்திருக்க வேண்டிய நேரங்கள் அவசியமாகின்றன. ஒரு குரு மனிதன் என்ற மட்டில் இத் துன்பக் கலம் தன்னைவிட்டு நீங்கவேண்டும் என்று செபிக்க வேண்டிய உந்துதலுக்கு பல வேளைகளில் ஆளாகினும் இறைசித்தம் எதுவோ அப்படியே ஆகட்டும் என்ற செப மனநிலையிலேயே நாள்தோறும் வளரவேண்டும். இம் மனநிலையைப் பெற நாளாந்த தியானமும் தனிச்செபமும் மிகமிக அவசியம்.

## நற்கருணை ஒரு நன்றிக் கொண்டாட்டம்

ஒரு குருவின் வாழ்வினதும் பணியினதும் ஊற்றும் உச்சியும் உறைவிடமும் நற்கருணைக் கொண்டாட்டமேயாகும். எனவே, அவர் தான் ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு பலியையும், தனது முதற் திருப்பலி போலவும் இறுதித் திருப்பலி போலவும் தன் வாழ்வின் ஒரே ஒரு திருப்பலி போலவும் ஒப்புக்கொடுக்க வேண்டும். திருவழிபாட்டின் மையமாகிய திருப்பலி சிறப்படைவது குருவின் கைகளிலேயே

தங்கியுள்ளது. பணித்தள இறைமக்கள் அனைவரின் விருப்பு வெறுப்புக்களை முழுமையாக நிறைவுசெய்ய முடியாதாயினும், முன்னுரை, பாடல்கள், மன்றாட்டு, வாசகங்கள், மறையுரை போன்ற திருப்பலிப் பகுதிகள் மற்றும் ஏனைய அருட்சாதன ஆயத்தங்கள் சிறப்பாக அமைவதற்கு இறைமக்களின் பங்களிப்பை பொருத்தமாகப் பெற்றுக் கொள்வது அவரின் கடமையாகும்.

## முடிவுரை

"தலைமைக் குரு ஒவ்வொருவரும் மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, பாவங்களுக்குக் கழுவாயாகக் காணிக்கைகளையும் பலிகளையும், செலுத்துவதற்காக மக்கள் சார்பாக கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்தப்படுகிறார்." (எபி. 5:1) என எபிரேயருக்கு எழுதிய திருமுகம் கூறுகிறது. இந்த இறைவார்த்தைக்கேற்ப ஒவ்வோர் பணிக்குருவும் நாளாந்தம் நிறைவேற்றும் பலிக்கு எற்ப வெண்ணிற அப்பமாகவும், செந்நிற இரசமாகவும், இறைமக்களின் மீட்பிற்காக நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகத் தன்னை இறைத்தந்தைக்கு ஒப்புக்கொடுக்க வேண்டிய வாழ்விற்கென அர்ப்பணமாகிறார்.

**அருட்திரு C.J. அன்ரனிபாலா**

**குருக்கள் ஆண்டவரின் சட்டத்தில் தாங்கள் தியானித்து வாசிப்பவற்றை விசுவசித்து, விசுவசிப்பவற்றை கற்பித்து, கற்பிப்பவற்றை வாழ்வில் கடைப்பிடித்து, போதிப்பதிலும் தேவ வார்த்தையை அறிவிப்பதிலும் ஈடுபட்டுழைக்கின்றனர். (திருச்சபை - 28)**

# ஈழத்தமிழரின் விடுதலைப் பயணத்தில் திருத்தலத்தின் நிலைப்பாடு

## 1. பழைய ஏற்பாடு :



இஸ்ராயேல் மக்களின் விடுதலையில் மோசேயின் பங்களிப்புப் பற்றி விடுதலைப் பயணநூல் விபரிக்கின்றது. எகிப்திய அடிமைத் தளையில் சிக்குண்ட மக்களின் அவலநிலையைப் போக்க இறைவன் கருணை கூர்ந்தார். "என் மக்களைப் போக விடு" என்று பார்வோன் மன்னனிடம் கூறும்படி ஆண்டவர் ஆணை பிறப்பிக்கின்றார் (காண். வி.ப. 5:1). "எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம் அவர்களின் துயரங்களை நான் அறிவேன்" (வி.ப. 3:7). இறைவன் அழைப்பை ஏற்க மோசே அச்சம் கொண்டார். தனது தகுதியின்மையை முன்வைத்து பின்வாங்கினார். ஆனால், இறைவனின் வல்லமையுள்ள கரம் அவரை வழிநடத்தியது. மீட்பு வரலாற்றிலே மோசே மறக்க முடியாத ஒரு தனிப்பெரும் தலைவராய் விளங்குகிறார்.

## 2. புதிய ஏற்பாடு :

நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து புதிய ஏற்பாட்டு மோசேயாக விளங்குகிறார். "ஆண்டவருடைய ஆவி என் மேலே உளது: ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர்

அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக். 4:18-19). இயேசுவின் இறைவாக்குப் பணியையும், குருத்துவப் பணியையும் உள்ளடக்கியதாக மேற் கூறப்பட்ட பகுதி விளங்குகின்றது. மக்களின் விடுதலை வாழ்வையே இயேசு தனது குறிக்கோளாகக் கொண்டு விளங்கினார். ஏழை களுக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் உரிமைக் குரலாகவும், துன்புறும் மக்களின் துயர் துடைப்பவராகவும், பாவ இருளிலே சிக்குண்ட மக்களை, விடுவிப்பவராகவும், உலக மீட்புக்காக உதிரம் சிந்தி உயிரைத் தியாகம் செய்பவராகவும் அவர் விளங்குகிறார்.

## 3. உலகின் இன்றை நிலை :

இன்று உலகின் பல்வேறு பாகங்களிலும் அடிமைப்படுத் தப்பட்டுள்ள சிறுபான்மை மக்கள் காணப்படுகின்றனர். இனரீதியாக, மொழிரீதியாக, தொழில்ரீதியாக, கல்வி பொருளாதார அடிப்படை யிலும், பெண்கள், சிறுவர்கள் போன்றோரும் வன்முறைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகின்றனர். அடக்குமுறைகளும் ஆயு தப் போராட்டங்களும் அதிகரித்து வருகின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகள், ஆபிரிக்க நாடுகள், சீனா, பர்மா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சிறுபான்மையினர் நீண்டகாலமாக பல இன் னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஒடுக்கப்படும் மக்களாக, உரிமை மறுக்கப்படும் மக்களாக மனித மாண்பை இழந்தவர்களாக, சமத்துவம் அற்றவர்களாக இருளிலே இன்று பலர் வாழ்கின்றனர். ஆசிய நாடுகளில் ஒன்றான இலங்கையும் இனப்பிரச்சினைகளுக்கு உள்ளாகி மீளமுடியாது தத்தளித்து தடுமாறுகின்றது. இவ்வாறான பிரச்சினைகளிலே கத்தோலிக்க திருச்சபை தன் பங்களிப்பைச் செய்ய எடுத்த முயற்சிகள் பல. ஆயர்கள், குருக்கள், துறவிகளின் ஈடுபாடும் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்று வந்துள்ளது. இன்றும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

## 4. இலங்கையின் இனப்பிரச்சினை வரலாறு :

கடந்த ஐம்பது வருடங்களாக இலங்கையில் இனப்பிரச்சினை தலைதூக்கியுள்ளது. சிறுபான்மைத் தமிழர் அரசியல் ரீதியாக, மொழி கல்வி ரீதியாக, தொழில் ரீதியாக ஒடுக்கப்பட்டு வந்துள் ளதை வரலாறு கூறிநிற்கின்றது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே

உரிமைக்குரல் எழுப்பப்பட்டது. சாத்வீகப் போராட்டங்களும் நடைபெற்றுள்ளன. 1956ல் கொழும்பு காலித் திடமுகத்தில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழினம் ஒடுக்கப்படுவதை எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்தனர். இந் நிகழ்விலே தமிழ்த்தூது தவத்திரு தனிநாயகம் அடிகளார் பங்குகொண்டார். இவர் ஒரு கத்தோலிக்க குரு என்பதால், பலருக்கு இவரது செயல் வியப்பை ஊட்டியது. அதிர்ச்சியையும் உண்டுபண்ணியது. இதை ஓர் அரசியல் ஈடுபாடு என்றும் சிலர் கருதினர். அதனால் இருபத்தைந்து வருடங்களின் பின் தமிழர் பிரச்சினையில் பல குருக்கள், துறவிகள் நேரடியான ஈடுபாடுகொள்ளத் தொடங்கினர். ஆயர் மன்றமும், ஆயர்கள் தனிமையாகவும் கண்டனக் குரல் எழுப்பினர். தமிழினத்தின் விடுதலைக்காகப் பல குருக்கள் தம்மை முழுமனத்தோடு அர்ப்பணித்தனர். ஆரம்பத்திலே அமைதியான முறையிலேயே தமிழினத்தின் உரிமைக்குரல் எழுப்பப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## 5. இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகள் :

முப்பது ஆண்டுகட்கு முன் இனக்கலவரங்கள் சிறிய அளவில் நடைபெற்று வந்துள்ளன. 1983ம் ஆண்டு ஒரு பாரிய இனக்கலவரம் வெடித்தது. இதனடிப்படையில் ஆயுதம் ஏந்தும் தமிழ்க் குழுக்களும் ஆரம்பித்தன. இக் குழுக்களுக்கு ஒருசில குருக்கள், துறவிகள் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆதரவளித்தனர். ஆனால், அதிகாரபூர்வமாக திருச்சபை ஆயுதக்குழுக்களை ஆதரிக்கவோ, ஊக்குவிக்கவோ முயலவில்லை. இனப்பிரச்சினையின் அடிப்படையில் பல குருக்கள் இரத்தம் சிந்தி உயிர் துறக்க நேர்ந்துள்ளது. மட்டக்களப்பில் (1985ல்) அருட்தந்தையர் சந்திரா பெர்னாண்டோ, மன்னாரில் (1985) மேரி பஸ்ரியன், ஜோர்ஜ் ஜெயராஜசிங்கம் மற்றும் புலப்பெயர்வின் தாக்கத்தினால் யாழ். மண்ணில் (1996) நோயுற்று இறந்த பத்துமாதக் குரு ஜோன்லொறட் ஆகியோரின் அர்ப்பணிப்பும், சாட்சியமும் வரலாற்றில் மறக்கமுடியாதவை. தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவது ஒரு அரசியல் ஈடுபாடு என்று குருக்கள் துறவியரை இன்று குற்றம் சாட்டுவது ஒருவிதமான பழமைப்போக்கென்றே கூறவேண்டும். ஏனெனில், மீட்பர் இயேசு முழுமனித விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து உயிர் துறந்தவர்.

ஒடுக்கப்பட்டோருக்கும் ஓரங்கட்டப்படுவோருக்கும் நிறைவாழ்வைக் கொடுக்க அவர் பாடுபட்டு உழைத்தவர். அவரது குருத்துவம் ஒரு பலிவாழ்வு. சிலுவையின் சாவை ஏற்கும் ஒரு தியாக வாழ்வு. இக் குருத்துவத்தில் தான் நாமும் பங்குபெற அழைக்கப்படுகின்றோம்.

## 6. இன்றைய திருச்சபையில் குருத்துவம்

"ஆசியத் திருச்சபை" என்ற ஆயர் மன்ற நிறைவு மறைத்தூது மடலில் (1999) எழைகள், குடிபெயர்ந்தோர், பெண்கள், குழந்தைகள் மீது திருச்சபையின் அக்கறை வெளிக்காட்டப்பட்டுள்ளது. "மேலும் எண்ணிலடங்கா மக்கள் அவர்களுடைய பண்பாடு, நிறம், இனம், சாதி, பொருளாதாரச் சூழல் அல்லது குறிப்பிட்ட சிந்தனை காரணமாக சொல்லொண்ணா துன்பங்களையும் துயரங்களையும் சந்திக்கின்றார்கள்" (எண் 34.). இவ்வாறு கூறும் திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியுள்ளார். மனித உரிமை மீறல்கள் மலிந்துள்ள இலங்கையில் இக் குறையை நீக்க குருக்கள், துறவிகள் முன்னின்று பணி ஆற்றுவது இன்று அவசியமாகின்றது.

போரினால் உயிரிழந்தவர் பலர், ஊனமுற்றோர் பலர், உயிரிழந்தவர்களில் குடும்பங்களை தாபரிக்க, ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு கொடுக்க பல குருக்கள் துறவியர் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். "சில நாடுகள் தங்களின் அடிப்படைத் தேவைகளையே பூர்த்திசெய்ய இயலாத நிலையில் பெரிய ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டுள்ளன. ஆயிரக்கணக்கான அப்பாவிமக்கள் ஊனமுறுவதும் கொல்லப்படுவதும் கவலைக்குரியதொன்றாகும்" (எண். 38) என கூறப்படுவது இலங்கைக்கு மிகப் பொருத்தமானது.

எனவே இந்நிலையில் குருக்கள், துறவியர் புதிய சவால்களை எதிர்கொள்கின்றனர். நற்செய்தியை போதிப்பதும், திருப்பலியை நிறைவேற்றுவதும் போதாது, மாறாக சாட்சியமுள்ள வாழ்வையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். "ஏனெனில், இன்றைய மக்கள் போதகர்களைவிட சாட்சிகளிலும், போதனையைவிட அனுபவத்திலும், கொள்கையைவிட வாழ்விலும் செயற்பாட்டிலும் அதிக நம்பிக்கை கொள்கிறார்கள்" (எண். 78) என்று மேலும் தெளிவாகக் கூறி நிற்கின்றது. எனவே இன்றைய மக்களின் தேவைகளை உணர்ந்து

அவர்களின் விடிவுக்காக உழைப்பது குருக்கள், துறவியரின் முக்கிய கடமையாகும்.

இலங்கை தேசிய மேய்ப்புப் பணி மகாநாடு (1995) நீதி சமாதானம் - மனித முன்னேற்றம் பற்றிய அறிக்கையில்: "முழுமை யான மனிதத்திற்கான ஏழைகளின் போராட்டத்தில் திருச்சபையும் இணையாவிடில் அபிவிருத்திக்கான அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டு விடும். இதனை ஏழைகளோடும், பாதிக்கப் பட்டவர்களோடும் சேர்ந்து உழைக்கும்படி திருச்சபை அழைக்கப் பட்டிருக்கின்றது..." (பக். 93) இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. மேலும், "இன்று இந்நாடு ஆயிரக்கணக்கான விதவைகள், வேதனையான நிலையிலுள்ள அநாதைகள், வாழ்வு பூராகவும் ஊனமாக்கப் பட்டவர்களால் நிரம்பி வழிகின்றது" (பக். 97) என்று கூறும்போது நாம் எதிர்நோக்கும் பாரிய பணியை எமக்கு அறிவுறுத்துகின்றது.

மேற்படி கருத்தை யாழ். மறைமாவட்ட மேய்ப்புப் பணிமாநாடு (1994) "புதுப்புனல்" என்ற ஆவணத்தில் வலியுறுத்தியுள்ளது. "மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை நமது மத்தியில் வளர்க்க வேண்டும். மனித உரிமைகள் மீறப்படுகின்ற அல்லது மறுக் கப்படுகின்ற வேளைகளில் பக்கசார்பற்ற முறையில் சுட்டிக்காட்டி, நீதி நிலைநாட்டப்பட ஆவனசெய்யவேண்டும். இத்தகைய செயற் பாடுகளில் ஆயர், குருக்கள், துறவிகள் மட்டுமல்ல, பொதுநிலை விசுவாசிகளும் தமக்குரிய முறையில் ஈடுபட வேண்டும்" (3:72பக். 27).

## 7. நிறைவாக

இன்று குருக்களின் பணிவாழ்வு பல புதிய சவால்களை எதிர்கொண்டுள்ளது. பாரம்பரியப் பணிகளை பங்குமனையில் அமர்ந்து கொண்டு செய்தால் போதும் என்று திருப்திகொள்ள முடி யாது. மக்களின் பிரச்சினைகளிலே ஈடுபாடு கொள்வதும், நற் செய்தியை அர்த்தமுள்ளதாக்கி மக்களின் விடுதலைக்காக அர்ப்ப ணத்தோடு செயற்படுவதும் அவசியமாயுள்ளது. குறிப்பாக இலங் கையைப் பொறுத்தமட்டில் அது போரிலே சிக்குண்டு நொந்துபோன நிலையிலே மீளமுடியாத ஒரு பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. வடகிழக்கு தமிழ் மக்கள் தம் உரிமைக்காகத் தொடங்கிய போராட்டம் இன்று ஆயுதப் போராட்டமாக பரிணமித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள், சொத்துக்கள் வீடுகளை இழந்த மக்கள், தொழிலையும் கல்வியையும் இழந்த மக்கள், சொந்த பந்தங்களை இழந்த மக்கள், ஏழைகள், விதவைகள், அனாதைகள் அதிகரித்து ஆதரவற்று வறுமைக்கோட்டிலே வாடி வதங்கி நிற்கும் நிலையிலே குருக்கள் துறவியரின் பணி என்ன என்பதை மீளாய்வு செய்வதும், புதிய பணிகளிலே ஈடுபடுவதும் மக்களின் விடுதலைக்காய் முழு உள்ளத்தோடு அர்ப்பணித்து தியாகமுள்ள சாட்சியமளிப்பதும் இன்றியமையாததொன்றாகும்.

காலத்தின் தேவைக்கேற்ப புதிய பணிகளை மேற்கொண்ட புனிதர்களான இஞ்ஞாசியார். யூஜின் டி மசனெட், வின்சென் டி போல், டொன் பொஸ்கோ மற்றும் சாள்ஸ் டி வூகோ ஆகியோரின் தூரநோக்கும் இன்று எமக்குத் தேவை. கல்கத்தா நகரிலே ஏழைகளுக்காக தன்னை அர்ப்பணித்த அன்னை திரேசா போன்ற பலர் நம் மத்தியில் உருவாக வேண்டும். மக்களின் முழு விடுதலைக்காக அர்ப்பணித்து உழைக்கும் ஆயர்கள், குருக்கள், துறவியரின் சாட்சிய வாழ்வையே இன்று எம் மக்கள் எதிர் பார்க்கின்றனர். இவர்களின் எதிர்பார்ப்பு கனவாகிப் போகாமல் நனவாக மாறிட பல குருக்கள் துறவியர் முன்வருவார்களாக.

அருள்திரு யே. நீக்கிலஸ்

துணைநின்ற நூல்கள்


1. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், ஆசியத் திருச்சபை, ஆயர் மன்ற மறைத்தூது மடல், சென்னை - 600014.
2. விசுவாசத்தின் புதிய விடியல், தேசிய மேய்ப்பு பணி மகாநாடு 1995 (கொழும்பு).
3. புதுபுனல், யாழ். மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு 1994.
4. The Voice of Our Pastors, Pastors Letter of the Catholic Bishops of Sri Lanka 1984 –1994.

# குருக்களின் பணிவாழ்வில் மரியன்னை - ஆன்மீகம்



## முன்னுரை

மரியன்னையின் வாழ்வையும் பணியையும் தியானிக்கின்ற ஒரு குரு கிறிஸ்துவின் குருத்துவம் என்றால் என்ன என்ற உண்மையை அதிகமாக விளங்கிக்கொள்கின்றார் என்று கூறலாம். மரியன்னையின் ஆன்மீகத்தில் பங்குகொள்வதன் மூலம் திருச்சபையில் ஒரு தாயுள்ளம் நிறைந்த ஒரு பணியை ஆற்றமுடியும் என்பதையும் அவரால் உணரமுடியும். இதற்குக் காரணமென்னவென்றால் எமது தலைமைக்குருவாகிய கிறிஸ்துவின் குருத்துவத் திருநிலைப்படுத்தல் மரியன்னையின் கருவறையிலேயே இடம் பெற்றது என்னும் சிறப்பம்சமாகும். அத்தோடு அவருடைய குருத்துவப் பணி வாழ்வும் மரியன்னையின் நெருங்கிய உறவிலும் ஒத்துழைப்பிலுமே தொடர்ந்தது என்பதுமாகும். இதனால்தான் ஒவ்வொரு குருவினதும் சிறப்பான பணிவாழ்வுக்கு மரியன்னை - ஆன்மீகம் அவசியமானது என்பது கண்கூடு.

மேல்மாடி அறை (தி.ப.1:4) அனுபவத்தினூடாக, ஒரு குருவினுடைய பணிவாழ்வுக்கு மரியன்னையினுடைய பிரசன்னமும் முன் மாதிரிகையும் தவிர்க்கப்பட முடியாதவை என்ற உண்மை புலனாகின்றது. திருச்சபை பிறந்த அக்கணத்திலிருந்தே மரியன்னை திருச்சபையின் ஒவ்வொரு பணியிலும் பங்கெடுக்கிறாள் என்றும் அப் பணியை சிறப்பிக்க விசேடவிதமாக தேர்ந்துகொண்ட குருக்களோடு அவள் துணைநிற்கிறாள் என்பதும் மறுக்கமுடியாதவையாகும். திருச்சபையின் தாய்மைச் செயலை வெளிப்படுத்துகின்ற ஒரு குருவின் பணிக்கு மரியன்னையே மாதிரிகையாக இருக்கிறார். இதனால்தான் ஒரு குருவிலே காணப்பட வேண்டிய மரியன்

னை - ஆன்மீகம் அவர் திருச்சபைக்கு விசுவாசத்துடனும் அன்புடனும் ஆற்றும் பணியிலே வெளிப்பட வேண்டியதாயிருக்கின்றது.

## *மரியன்னையும் குருவாகிய கிறிஸ்துவும்*

எம் தலைமைக் குருவாகிய கிறிஸ்துவின் குருத்துவப் பணியில் மரியன்னை எவ்வாறு பங்குகொண்டாள் என்பதை நாம் ஆராயும்போது ஒரு குருவின் வாழ்வில் அவளுடைய ஒன்றிப்பின் அவசியம் புலப்படும். கிறிஸ்துவோடு, சிறப்பாக, அவருடைய குருத்துவப் பணியோடு மரியன்னை கொண்டிருந்த ஒன்றிப்பை பின்வரும் அம்சங்களில் நோக்கலாம்.

### 1. ஏற்றுக்கொள்ளல் :

தந்தையினுடைய மீட்புத் திட்டத்திற்கு கிறிஸ்துவினுடைய 'ஆம்' என்ற பதில் மரியன்னையினுடைய 'ஆம்' என்ற ஏற்றுக் கொள்ளலோடு முழுமையாக இணைந்திருந்தது என்று கூறலாம். (எபி. 10:5-7; லூக். 1:38)

### 2. உறுதியாய் நிலைத்திருத்தல் :

தனது 'ஆம்' என்ற ஏற்றுக்கொள்ளலில் அவள் இறுதிவரை, அதாவது, சிலுவைப் பலி வரை உறுதியாக நிலைத்திருந்தது கிறிஸ்துவின் குருத்துவப் பணியை முழுமைப்படுத்தியது எனலாம்.

### 3. ஒத்துழைப்பு :

பலிப்பொருளாகவும், பலியாகவும், இடைநிலையாளராகவும், மீட்பராகவும் இருக்கும் கிறிஸ்துவுக்கு மரியன்னை வழங்கிய ஒத்துழைப்பு அவருடைய குருத்துவப் பணிக்கு உறுதி சேர்த்ததாகும்.

4. பரிந்துரைத்தல் :

தந்தைக்கும் எமக்குமிடையே பாலத்தை ஏற்படுத்தும் கிறிஸ்துவின் பணியில் தானும் ஒரு பாலமாக இணைந்து பரிந்துபேசி குருத்துவப்பணியின் பரிந்துரைக்கும் செயற்பாட்டில் பங்களிப்புச் செய்வதாகும்.

மேற்படி அம்சங்கள் கிறிஸ்துவின் குருத்துவத்தில் மரியன்னையின் பங்களிப்பை வெளிப்படுத்தும்போது அக்குருத்துவத்தை இன்று தொடர்ந் தாற்றும் குருக்களிலும் இவை வெளிப்பட மரியன்னை - ஆன்மீகம் துணைநிற்க வேண்டும்.

## திருச்சபையின் குருத்துவப்பணியில் மரியன்னையின் பரிணாமங்கள்

மரியன்னை - ஆன்மீகத்தினால் ஊட்டம் பெறும் திருச்சபையின் குருத்துவப்பணி நிச்சயமாக மரியன்னையின் பரிணாமங்களை கொண்டு விளங்கும் என்பது வெளிப்படை. அவையாவன :

1. கிறிஸ்துவை உலகிற்கு அறிவிப்பது
2. கிறிஸ்துவை உலகில் பிரசன்னப்படுத்துவது
3. கிறிஸ்துவின் மீட்புத்திட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளச் செய்வது.

சங்க ஏடுகள், திருச்சபை, எண் 65ல் கூறப்படுவது போல மரியன்னையின் பரிணாமங்களை தனது பணியில் வெளிப்படுத்தும் திருச்சபை மரியன்னையைப் போல ஒரு கன்னியாகவும் தாயாகவும் இருந்து ஒரு தாயன்பு ஊடாக தன் அப்போஸ்தலிக்க அலுவலை ஆற்றுகிறது எனலாம்.

## மரியன்னை - ஒவ்வொரு குருவுக்கும் அன்னை

கிறிஸ்துவின் அன்னையாகிய மரியன்னை கிறிஸ்துவின் பணிக் குருத்துவத்தில் பங்குகொள்ளும் ஒவ்வொரு குருவுக்கும் அன்னையாக இருக்கிறாள். இதனால்தான் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்

மரியன்னையை "குருக்களின் அன்னை" என்று அழைக்கின்றார். (கடிதம் பெரிய வியாழன், 1979). புனித யோண் யூட்ஸ், "ஒவ்வொரு குருவிலும் மரியன்னை தனது மகன் கிறிஸ்துவைக் காண்கின்றான்" என்று கூறுகின்றார்.

ஒவ்வொரு குருவுக்கும் தானே அன்னை என்ற உரிமையை மரியன்னை வலுக்கட்டாயமாக பெற்றுக்கொள்கிறாள் என்றும் கூறலாம். தனது பணிவாழ்வின் இறுதி மூச்சுவரை தன்னருகில் மரியன்னையை வைத்திருந்த கிறிஸ்துவைப் போல ஒவ்வொரு குருவும் மரியன்னையை தனது பலமும் கேடயமுமாக வைத்திருக்க வேண்டியது இன்றியமை யாததாகும். இதனால் ஒவ்வொரு குருவும் மரியன்னையோடு கொண்டிருக்க வேண்டிய உறவு கிறிஸ்துவாலே விரும்பப்பட்ட ஒன்றாக இருப்பதை காணமுடியும்.

## முடிவுரை :

ஒரு குருவினுடைய தூய்மையான குருத்துவப்பணிக்கு மரியன்னையினுடைய துணை மிகவும் இன்றியமையாததாகும். மரியன்னையை அறிந்து, அன்புசெய்து, பின்பற்றி, அவளுடைய பரிந்துரையைப் பெற்று ஒரு குரு பணி செய்கின்றபோது அப்பணி எப்போதுமே கிறிஸ்துவின் குருத்துவப் பணியோடு இணைந்ததாக இருக்கும். மரியன்னையை ஆட்கொண்ட தூய ஆவியாரினால் அபிஷேகம் செய்யப்படும் ஒவ்வொரு குருவும் கிறிஸ்துவை பிரசவிக்கும் பணியிலிருந்து சற்றும் தவறாதிருக்க அதே ஆவியாரின் வழிநடத்தலைப் பெற மரியன்னை துணையிருப்பாள்.

எனவேதான், ஒரு குரு மரியன்னையின் பிள்ளையாக தன்னை உரிமையோடு அழைத்து அந்த அன்னையின் ஆன்மீகத்தில் தன்னை எப்போதும் வளர்த்து பலன்கொடுக்கும் குருத்துவப் பணிபுரிய தன்னை அந்த அன்னையின் பக்தனாக அர்ப்பணித்து வாழவேண்டும்.

அருட்திரு ப. யோ. ஜெபரட்னம்.

# இவ்விதழின் இறையியலாளர்

## மிலான் நகர, புனித அம்புறோசியார்

### (340 - 397)

இவர் இலத்தீன் திருச்சபையின் தந்தையருள் சிறந்த இறையியலாளரும் இத்தாலியின் மிலான் நகர ஆயருமாகத் திகழ்ந்தார். இவர் ஏறத்தாழ கி.பி. 340ல் தற்போதைய ஜேர்மன் நாட்டின் ற்றையர் (Trier) என்னுமிடத்தில், நற்கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார்.

அம்புறோசியார் இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழி களிலும் சட்டத்துறையிலும் பெரும் பாண்டித்தியம் பெற் றார். இவரது சட்டத்துறையின் திறமை வலன்ரீனியன் என்ற சக்கரவர்த்தியின் கவனத்தை ஈர்த்ததால், இவர் லிகாறியா (Liguria) எமிலியா (Emilia) ஆகிய இடங்களின் ஆளுநராக நியமனம் பெற்று, மிலானில், தனது இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். மிலான் நகர ஆயர் இறந்தபோது, அம்புறோசியார் ஆயத்த நிலைக் கிறிஸ்தவராக இருந்தார். அவ்வேளையில் மிலான் நகர ஆயராக மக்களால் தூண் டப்பட்டு, 374ல் தயக்கத்துடன் ஆயராகப் பொறுப்பேற்றார். ஆயினும் மிக்க துணிவுடனும் திறமையுடனும் பணியாற்றி னார்.

உரோமை ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோன்மைக்கு எதிராகவும் பாவத்தீமைகளை வன்மையாக எதிர்ப்பதிலும் மனத் துணிவுடனும் முழு மூச்சுடனும் ஈடுபட்டார்.

தலைசிறந்த போதகரான இவரின் போதனையால் ஆட் கொள்ளப்பட்ட அகுஸ்தீனார் மனம்மாறி நன்நெறியிற் சிறந்து புனிதரானார்.

அஞ்ஞானத்திற்கும், ஆரிய பேதகத்திற்கும் எதிரான வன்மைமிக்க சம்மட்டியாக விளங்கியுள்ளார்.

23 ஆண்டுகள் வட இத்தாலியின் மிலான் நகர ஆயராக விளங்கிய இவர் 397, ஏப்ரல் 4ம் நாள் இறையடி சேர்ந்தார். திருத்தந்தை 8ம் பொனிப்பாஸ் 1295ல் திருச்சபையின் மறைவல்லுநர் *(Docter of the Church)* என்ற உயரிய நிலைக்கு புனித அம்புறோசியாரை உயர்த்தியுள்ளார்.

திருச்சபையின் கொள்கையியல் தொடர்பான இவரது ஆக்கங்கள் சில...

1. விசுவாசம் (De fide)
   ஐந்து புத்தகங்களைக் கொண்ட இவற்றில் சில இறை வார்த்தையின் தெய்வீகம் பற்றி ஆராய்கிறது.

2. பரிசுத்த ஆவி (De Spiritu Santo)
   தூய ஆவி இறைமகன் போல இறைத்தந்தையோடு ஒரே பொருளானவர் என விபரிக்கிறது.

3. மனுவுரு ஏற்ற ஆண்டவரின் அருட்சாதனம் (De incarnationis dominicae sacramento)
   இது ஆரியனிசத்தின் தவறுகளை நிரூபணமாக்குகின்றது.

4. மறைபொருள் (De Mysteriis)
   கிறிஸ்தவ புகுமுக அருட்சாதனங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

5. தபம் (De Paenitentia)
   இது நொவேசியன் பிரிவினரின் தவறுகளை நிரூபணமாக்குகிறது. 4ம் நூற்றாண்டின் நோன்பு பற்றியும் குறிப்பிடுகின்றது.

அருட்சகோ. ஐ. அ. அருள்தாசன்

## SYNOPSIS

# PEOPLE OF GOD AND THE TRIPLE FUNCTION OF CHRIST

The people of God is marked by characteristics that clearly distinguish it from all other religious, ethnic, political, or cultural groups found in history. God is not the property of anyone people. But he acquired a people for himself from those who previously were not a people ; "a chosen race, a holy priesthood, a holy nation" (1 Pet. 2:9).

Jesus is the one whom the Father anointed with the Holy Spirit and established as *priest*, prophet and *king*. The whole people of God participates in these three offices of Christ and bears the responsibilities for mission and service that flow from them.

As *priestly people* every baptized faithful participates in the sanctifying mission of Christ. Even though all the members of the People of God participates in the 'Common priesthood', some among them are specially called to participate in the 'Ministerial priesthood', where they act in the Person of Christ.

As *prophetic people* all the members of the People of God are called to adhere unfailingly to the faith and proclaim it through their words and especially in their deeds.

As royal people they share in the royal office of Christ, not by ruling, but by serving. Christ King and the Lord of the Universe, made himself the servant of all, for he came 'not to be

served but to serve and to give his life as a ransom for many' (Mt. 20:28)

Therefore, every faithful must realize the seriousness of his call in baptism, and especially in today's context, he or she has to strive hard to fulfil his responsibility as true follower of Christ, by faithfully participating in his triple function according to his ability.

*Bro. Praveen Mahesan OMI*

# THE PROPHETIC ROLE OF THE PRIESTHOOD

The Apostles were entrusted with the mission of announcing the good news of God's Kingdom. They fulfilled this mission very faithfully. "And everyday in the temple and in people's homes they continued to teach and preach the good news about Jesus the Messaiah" (Acts. 5:42). They took this mission as their priority without any excuse. "It is not right for us to neglect the preaching of God's word in order to handle the finances" (Acts. 6:12)

St. Paul realized that it was his prime duty to preach the gospel. "And how terrible it would be for me if I do not preach the gospel" (1 Cor. 9:17). He exhorted his disciple Timothy to preach the gospel without ceasing. "I command you to preach the message, to insist upon telling it, whether the time is right or not, to convince, reproach and encourage, teaching with all patience" (2 Tim. 4:2).

Following the command of Christ to preach the gospel to all nations the church continues to fulfil this mission through the Bishops, priests and other ministers. The second Vatican council emphasises the task of the priests to preach the gospel. "They shoulder the sacred task of the gospel, so that the offering of the people can be made acceptable through the sanctifying power of the Holy Spirit" (P.O.No. 2). Hence the priests, bishops and religious should become well rooted in the word of God in order to become efficient ministers.

***Mr. M. Jesuthasan***

# Ministerial Priesthood and Liturgy

*The priesthood becomes meaningful in the daily celebration of the Eucharist, sacraments and the liturgy of the hours. As the host changes into the sacred Body of Christ through the hands of the priest so too his life should become holy. When the wine changes into the blood of Christ it becomes a symbol of the sufferings that a priest must undergo.*

*Priests are collaborators of the Bishop and also the deacons. A cordial relationship needs to built up between the Bishop and the priests because it is the Priesthood of Christ that binds them together.*

*Jesus Christ instituted the priesthood during the last supper when he said: "Do this in memory of me." In order to perpetuate the celebration of the Eucharist he instituted the sacrament of the priesthood.*

*Blessed Virgin Mary stood at the foot of the cross when Jesus offered all the priests under the care of her mother. She loves all the priests because she is the mother of the priests.*

*The church grew and became strong because of many commited priests. There are many missionaries who toiled hard for the growth of the church. Christ is the example for all the priests in fulfilling the will of the Father.*

Rev. Fr. C.J. Antony Bala

# The Meaning of the priesthood in the liberation struggle of the Tamils in Sri Lanka

In the Old Testament Moses was called by God to set free the Israelites from the slavery of Egypt. "Let my people go" was the command of God. Jesus came into this world in order to liberate the sinners, the suffering and the oppressed.

All over the world today there is a cry for a liberation. Most of the Asian countries are faced with the problems of oppression of the miniority, which is the cause of war.

The ethnic conflict is Sri Lanka began almost five decades ago. The Tamils as a minority felt the discrimination at various levels and peaceful protests were made in the beginning. The catholic church did not launch any serious programmes in the beginning against the injustice. The politicians too failed to fight with committment for the equality of the Tamils. The Tamil youth began to take up arms to fight for justice. Some of the clergy and religious supported the liberation struggle of the Tamils after which the church officially began to raise her voice for justice.

Pope John Paul II together with the Asian Bishops showed his concern for the sufferings of the minority in the synodal document: "Ecclesia in Asia". He has mentioned about Human rights violations and racial discriminations. The people expect the clergy to live a life of witness more than their preching.

There are new challenges in the mission of the priests. There are thousands of displaced people, widows, orphans and handicaped who demand new ministries from the part of the priests.

*Rev. Fr. J. Nincholas*

# Marian Spirituality in the mission of a Priest

When a priest meditates on Mary and follows her example, he understands more fully the mystery of Christ the Priest that is prolonged in the Church, and in which the priest participates in a special way. Marian spirituality helps the priest to live Mary's active and motherly presence in the Church and in humanity. The reason for this is that Christ's sacerdotal anointing occurred in Mary's womb; His priestly work was fulfilled by associating Mary with it.

The example of the Upper Room will always remind the priest, as the leader of the community, that the Church must experience the presence and example of Mary.

Mary's union with Christ the Priest is expressed in various fundamental aspects: *acceptance, perseverance, association* and *intercession*. Christ's priestly reality is prolonged in the Church and is shared in a special way by priests. Thus the Church's sacerdotal function has a Marian dimension: to proclaim, to make present, to communicate Christ and his salvation.

Therefore, the effectiveness of the priestly ministry is, in a certain way, conditioned by the priest's Marian spirituality, which is an imitation of the vital experience of Christ.

Mary has acquired maternal rights over priests. Therefore a priest has a special right to call Mary as his mother. His devotion to Mary will enrich his ministry.

***Fr. P.J. Jebaratnam***

# இறையியல் கோலங்கள்

## குறுக்கெழுத்துப் போட்டி - இல. 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | | | | | |
| | 7 | | | | |
| 8 | | | 9 | | |
| 10 | | | | | 11 |
| 12 | | | | 13 | |

அனுப்புபவரின் பெயர் : ..................................................................

விலாசம் : ..................................................................................

..................................................................................

..................................................................................

விடைகள் மார்ச் **2001** இதழில் உள்ளன.
விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்
போட்டி முடிவு தினம் **15** ஜுலை **2001**

அனுப்ப வேண்டிய முகவரி :

இறையியல் கோலங்கள்
குறுக்கெழுத்துப் போட்டி இல. 4
தியான இல்லம், பண்டத்தரிப்பு

## இடமிருந்து வலம்

1. திருச்சபையின் ஒன்றித்த உறவு ஒரு இது ஆகும். (5)
7. காற்று (வலமிருந்து இடமாயுள்ளது) (2)
9. சுதன் (குழம்பியுள்ளது) (3)
10. ஒரு புரட்டஸ்தாந்து சபையின் நிறுவுனர் (4)
12. இவ் இதழின் கட்டுரைகள் பல 2ம் வத்திக்கான் சங்க இவற்றின் அடிப்படையாக எழுதப்பட்டவை. (4)
13. இறையியல் கோலங்களை சுருக்கமாக இவ்வாறு அழைக்கலாம். (2)

## மேலிருந்து கீழ்

1. இறைவனின் மீட்புத் திட்டமாகிய மறைபொருள் வெளிப்பட இயேசுவின் பாடுகள், இது, உயிர்ப்பு என்பவை காரணமாகும். (4)
2. கிறிஸ்துவின் திருச்சபையே அவரது உண்மையான இது ஆகும். (5) (குழம்பியுள்ளது)
3. கத்தோலிக்க திருச்சபை என்பதை இப்படியான திருச்சபை என்றும் அழைக்கலாம். (4)
4. உலகளாவிய திருச்சபை இவரின் மரபு வழியில் உருவாகின்றது. (3) (தலைகீழாயுள்ளது)
5. செங்குத்துப் பரிமாண ஒன்றிப்பு இவர்களுக்கும் திரித்துவத்துக்கும் இடையேயான உறவை சித்தரிக்கின்றது. (6) (தலைகீழாயுள்ளது)
6. இவ் இதழின் கட்டுரைகளில் ஒன்றை எழுதியவர் (5)
8. நற்கருணை விருந்தில் பங்குகொள்ளும்போது முழுத் திருச்சபையுமே அங்கு பிரசன்னமாயிருக்கிறது என்றால் அது திருச்சபை இது என்பதற்கு சான்றாகின்றது (3) (தலைகீழாயுள்ளது)
11. அரசன் (2) (தலைகீழாயுள்ளது)

வாசக நேயர்களே!

- உங்கள் விமர்சனங்கள் எங்கே?
- உங்கள் நண்பர்களுக்கு இறையியல் கோலங்களை அறிமுகப்படுத்திவிட்டீர்களா?
- இச் சஞ்சிகைக்கு முகவர்களாக பணியாற்ற விரும்புகின்றீர்களா?
- உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொண்டீர்களா?

அடுத்து வர இருப்பது ➡ மரியாள் பற்றிய இறையியல்

# இறையியல் கோலங்கள்
## குறுக்கெழுத்துப் போட்டி - இல. 3
### முடிவுகள்

**சரியான விடைகள்**

இடமிருந்துவலம்
1. இடப்பெயர்வு
4. ஸ்தாபகர்
8. காற்று
9. அறைகூவல்
11. காரான்
12. அறிவிப்பு

மேலிருந்துகீழ்
1. இஸ்ராயேல்
2. ஆயர்
3. அகுஸ்தினார்
5. பசி
6. வெண்ணிறஆடை/ திருஎண்ணெய்/ எரியும் திரி
8. வடிகால்
9. அகல்
10. அன்பு

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் :

1ம் பரிசு - ரூபா 250
எ.க. மேரி அருள்மதி
ஞானப்பிரகாசர் வீதி
மல்வம்.

2ம்பரிசு - ரூபா 150
ஏ.ஆர். நவதர்சனா
சென்.தோமஸ் லேன்
பருத்தித்துறை

3ம் பரிசு - ரூபா 100
ச. விமலநாதன்
சென். ஜேம்ஸ் வீதி, இளவாலை.

**பாராட்டுப் பெறுவோர்:-**

எஸ். மரியகொன்சி, முனை; எம் நிலோஜனா, பருத்தித்துறை; எ. சியாமளா, பருத்தித்துறை; எ.பி. றெமிக்கா, பருத்தித்துறை; சொபியா ஞானரட்ணம், ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்; அன்ரனிற் பொலின், பெரியவிளான்; அ.ஜோய்சி, இளவாலை; லுமின் கொன்சேகா, அல்வாய்; மரியபெனிற்றா, இளவாலை; பி. சாந்தன்; பா. ஜெனற்ராஜ்; அ. லொயலா; பி. ஜெபராஜ்; அ. அமல்ராஜ்; பா. மேரி நிருபா, உயிலங்குளம்.


**குறிப்பு :-**

**குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றுவோர் இறுதிநாள் வரை காத்திருக்காது நேரகாலத்தோடு பங்குபற்றி ஏமாற்றத்தை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

பணிக்குருத்துவம் - 25 ஆண்டுகள் நிறைவு

# யூபிலி நாயகனை

## வாழ்த்துகின்றோம்



அருட்திரு S.V.B. மங்களராஜா

**குருப்பட்டம் : 11.05.1976**

**வெள்ளி விழா: 11.05.2001**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின்**

*உப அதிபரும்*

*சிரேஷ்ட விரிவுரையாளரும்*

*'இறையியல் கோலங்கள்' துணை ஆசிரியருமாக*

**அரும்பணி ஆற்றிவரும்**

**எம் அன்புக்கும், பாசத்துக்குமுரிய**

**அருட்தந்தையை**

**தூய ஆவியின் அருள்பெற்று**

**பல்லாண்டுகாலம் சிறப்போடு வாழ**

**வாழ்த்துகிறோம்.**

25

புனித சவேரியார் குடும்பமும்
இறையியல் கோலங்கள் வாசகர்களும்

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்
ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/=
தனிப் பிரதி 25/=

தொடர்புகொள்க :

"இறையியல் கோலங்கள்"
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
தொலைபேசி 021 – 2482

# IRAI IYAL KOLANGAL

A Tamil Theological Quarterly
Annual subscription (Including Postage within Sri Lanka) Rs.80/=
Single Copy 25/=

**Subscription and Correspondence to :**

Irai Iyal Kolangal
St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna,
Sri Lanka.

Tel. No. 021-2482

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், இலங்கை 2001 ☎ 021-2378